DECEMBER 2022 **P/ID 35320/PTL2K**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. பெரியாரின் இளமைக் கல்வி குறித்து எழுதுக.

2. நாகம்மையின் குணநலன்களைச் சுட்டுக.

3. தந்தையோடு கோபித்துக் கொண்டு பெரியார் எங்கு சென்றார்? என்ன செய்தார்?

4. ஈரோடு நகரசபைத் தலைவராகப் பெரியார் ஆற்றிய அரும்பணிகள் யாவை?

5. பெரியாரின் கதர் ஆடை விற்பனை குறித்து எழுதுக.

6. பெரியார், வைக்கம் வீரர் என அழைக்கப்படக் காரணம் என்ன?

7. சேரன் மாதேவி - குருகுலம் மூடப்பட்டதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

8. செங்கல்பட்டு சுயமரியாதை மாநாடு குறித்து எழுதுக.

9. திராவிட இயக்கத்திற்கான தோற்றுவாயினை விளம்புக.

10. சுயமரியாதைத் திருமணம் குறித்து எழுதுக.

11. குடியரசு இதழின் தலையாய நோக்கினைச் சுட்டுக.

12. பெரியாரின் மறைவு குறித்து எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. பெரியாரின் குடும்பப் பின்னணியை எழுதுக.

14. பெரியார் வகித்த பதவிகளை எடுத்துரைக்க.

15. இந்திய தேசியக் காங்கிரஸில் இருந்து பெரியார் வெளியேறக் காரணமான நிகழ்வினைத் தொகுத்து எழுதுக.

16. பெரியாரின் கோவில் நுழைவுப் போராட்டத்தை எடுத்தியம்புக.

17. பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனையினை விளக்குக.

18. பெரியாரின் இதழியல் பணிகளைத் தொகுத்துரைக்க.

19. மொழிச் சீர்திருத்தத்திற்குப் பெரியார் ஆற்றிய பணிகளைப் பட்டியலிடுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. பெரியாரின் காசிப் பயணம் குறித்து விவரிக்க.

21. ஏற்றத்தாழ்வு நிலை நீங்கப் பெரியார் ஆற்றிய தொண்டுகளை விளக்கியுரைக்க.

22. "பெரியாரின் பொது வாழ்வு" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

23. பெண் விடுதலைக்காகப் பெரியார் ஆற்றிய அரும்பணிகளை விளக்கி வரைக.

24. தமிழ் மொழிக்காப்புப் போராட்டத்தில் பெரியாரின் பங்களிப்பினை விவரிக்க.

———————